உ
சிவமயம்

News
aperin Ceylon
P. M. G. NO. H. A
69/300 of 1939.

இந்துசாதனம்

விரோதி வருஷ
(1889)
ஆவணிமாதம்
28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை போய்கையும் போன்றதே, ஈசனேந்தை யிணையடி நிழலே.

புத். ருகூ] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஸு புரட்டாதி மீ கச உ (1947 செப்டம்பர் 30 செவ்வாய்க்கிழமை) [இல சகூ

பிரார்த்தனை

எத்தனை விதங்கடான் கற்கினுங் கேட்கினுமென் னிதயமு மொடுங்கவில்லை
யானெனு மகந்தைதா னெள்ளளவு மாறவிலை யாதினும் அபிமானமென்
சித்தமிசைகுடிகொண்ட(து) ஈகையோடிரக்கமென்சென்மத்துநானறிகிலேன்
சீலமோடு தவவிரத மொருகனவி லாயினுந் தெரிசனஞ் செய்துமறியேன்
பொய்த்தமொழியல்ல னம்மருந்துக்குமெய்ம்மொழிபுகன்றிடேன்பிறர்கேட்கவே
போதிப்ப தல்லாது சும்மா யிருந்தருள் பொருந்திடாப் பேதைநானே
அத்தனைகுணக்கேடர்கண்டதாக்கேட்டதாஅவனிமிசையுண்டோசொலாய்!
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி யானந்தமான பரமே!

— தாயுமானவர்.

பாரதி விழா

அக்டோபர் 13இல்

பாரதிவிழா எட்டியாபுரத்தில் வருகிற 13-10-47-இல் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படும். ஐக்கிய யாகாணத்தேசாதிபதி ஸ்ரீமதி சரோஜினிதேவி, மேற்கு வங்காளத் தேசாதிபதி ஸ்ரீஜுத் ஸி. இராஜகோபாலாச்சாரியார், சென்னைப் பிரதமர் ஸ்ரீ ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் முதலியோர் விழாவிற் சமுகமளிப்பர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்விழாவை உயரிய முறையிற் கொண்டாடி, அமரகவி பாரதியின் உன்னத லட்சியங்களுக்காகத் தமிழ் மக்களை ஊக்குவிக்கப் பெருந்தொகைப்பணம் தேவை என்றும், அதனை தமிழ்நாட்டு மக்கள் உதவவேண்டுமென்றும் மேற்படி விழாக் காரியதரிசிகள் தெரிவிக்கின்றனர்.

யுத்தமா?

மகாத்மாவின் விளக்கம்

பாகிஸ்தான் தன் பிழையை உணர்ந்து, அதனை நிவிர்த்தி செய்ய மார்க்கம் தேடாவிட்டால், அதனை நல்வழிக்குக் கொண்டுவர, இந்தியா பாகிஸ்தானுடன் யுத்தம் செய்யும் நிலைமை ஏற்படலாம் என்று மகாத்மாகாந்தி சென்றவாரம் புதுடெல்கியில் நிகழ்ந்த தமது பிரார்த்தனைக் கூட்டத்திற் கூறினார்.

யுத்தம் பிழையான மார்க்கம் தான்; அதனால் நேருவது சர்வநாசம் தான்; ஆனால் அந்த உண்மையைப் பாகிஸ்தான் இன்னும் உணராமலிருக்கிறது என்று மகாத்மாகாந்தி குறிப்பிட்டார்.

நான் ஏன் ஹிந்துவானேன்?

[வி. ஞானமணி பட்டங்கெட்டியார்]

(முற்றொடர்)

மதக்கொள்கைகளை நம்பாதவரைத் தண்டித்தல் முதலாகிய பலாத்காரக் கொள்கைகளே பின்பற்றப்பட்டு வந்ததற்கு சரித்திரமே சாக்ஷி கூறுகிறது சமயத்தின் பேரால் கொடிய பாதகங்களெல்லாம் வளர்ந்தன. அன்பு, நல்லெண்ணம், இரக்கம், நேசம், அமைதி, தாண்டவமாட வேண்டியஇடத்தில் கொடுமை, பகைமை, வெறுப்பு, சண்டை தலைவிரித்தாடின. சமயத்தின் பேரால் கத்தி எடுக்காதிருந்தாலும் நல்லோர் பலரைக் கொலைசெய்யாதிருந்தாலும் பல நூற்றாண்டுகளுக்கு முந்தியே இக் கொள்கைகள் உலகத்தாரால் புறக்கணிக்கப்பட்டிருக்கும். மதம் வளர்ந்தவிதம் இப்படியிருக்க, மதக் கொள்கைகளுக்கு வருவோம.

உலகம் 6 நாளில் உண்டாயது. அது சூனியத்திலிருந்து உண்டாயது. உலகத்திற்குப் புறம்பேயுள்ள ஒருவர் படைத்தார் என்ற கட்டுக்கதைகளை பரிணமக்கொள்கையில் நம்பிக்கையுடைய இந்து விவேகமற்றதாகவும் விபரீதமானதாகவும் காண்கிறான். இந்து தத்துவ ஞானிகளில் ஆதிகாலத்தவரும் தற்காலத்தவரும் எழுதியுள்ள கடல்போல் பரந்து கிடக்கும் சமய நூல்களை ஆராய்ந்து பார்த்தால் எங்கு தேடினும் இன்மையிலிருந்து (சூனியத்திலிருந்து) தோற்றம் உண்டென்றோ உலகத்திற்குப் புறம்பேயுள்ள ஒருவர் உலகத்தை உண்டாக்கினாரென்றோ காணமுடியாது. இந்த உயர்ந்த கருத்துக்கள தற்கால விஞ்ஞானிகளால் உறுதிப்படுத்தப்பட்டு வருகிறது.

கிறிஸ்தவ சமயக் கொள்கைப்படி உலக உற்பத்தியின் ஆதி மனிதன் ஆதாம் என்பவனாவான். சாத்தானின் வயப்பட்டு தேவனின் கோபத்திற்கு ஆளாகி சுவர்க்கத்திலிருந்து தள்ளப்பட்டு தீமைக்கு உடன்படுதலை ஒரு நாடகமாகக் கூறுகிறார்கள். ஆதாம் பாவம் செய்ததால் அவன் சந்ததியார்களெல்லாம் பாவிகளாய்ப் பிறந்தார்களென்பது பகுத்தறிவிற்கும் விஞ்ஞானத்திற்கும் முரண்பாடாகும். ஆதாம் படைப்பிற்கு முன்னரே கோடிக்கணக்கான மக்கள் வாழ்ந்தனர்; இறந்தொழிந்தனர். முன் காலம் சென்றோராகிய இவர்களை ஆதாம் செய்த பாவச்செய்கைகள் எவ்வாறு பாதிக்கும்? கிறிஸ்து பிறப்பதற்கு முன் பல்லாயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன் நாகரீகம் நிறைந்த மககட்டொகுதியினர் வசித்து வந்தார்களென்று தற்காலத்தில் பூமியைத் தோண்டித்தெடுத்த

தொடர்ச்சி 6 ம் பக்கம்

ஐயனார் மகத்துவம்

தன் பேரழகு தனக்குத் தெரியாதென்பர்

(முற்றொடர்)

அசமுகி தன் தோழியாகிய துன்முகியுடன் அந்தப் பூஞ்சோலை எங்கணும் உலவி அதன் சிறப்பைப் பாராட்டிக்கொண்டு வரும்போது, இந்திராணி ஒருபுறத்தே இருந்து தவஞ் செய்வதைக் கண்டாள்; கண்டவுடனே ஐற்புதங் கொண்டவளாய்த் தன் தோழியை நோக்கி, "ஏ, சகியே, அங்கே பார், இவள்தான் இந்திராணிபோலும்; இவள் விண்ணுலக போகங்களையெல்லாமிழந்து இந்தச் சோலையில்வந்து தன்னந்தனியே இருந்து தவஞ் செய்கின்றாள்: இவளைத் தேடி அகப்படுத்தி வருவீரென எங்கள் அண்ணனும் ஆயிரத்தெட்டு அண்டங்கட்கு இறைவனுமாகிய சூரபன்மன் பல அசுரர்களை உலகெங்கணும் விடுத்திருக்கின்றான்; அவ்வசுரர்களெல்லாம் இவள் இங்கிருக்கின்றாளென்பதை அறியாமையினால் விண்ணுலகம் முதலிய ஏனைய உலகங்களிலே இவளைத் தேடியலைகின்றார்கள்; இவளைப் பல அசுரர் எங்குந் தேடியலைந்து அலுத்து மீண்டுவந்து "நாம் எங்குந் தேடியுங் கண்டிலேம்" என்று முறையிட்டபோது, எங்கள் அண்ணன் பெருஞ் சீற்றங்கொண்டு மீட்டும் இவளைத் தேடும்படி மேலும் பல ஒற்றர்களை விடுத்தான்; அவர்கள் அந்த விண்ணுலகம், இந்த மண்ணுலகிலுள்ள நாடுகள், காடுகள் மலைகள் எவ்விடத்தும் பாதாளத்திலும் தேடியலைந்தும் இவளைக் கண்டிலர் மீண்டனர்; நல்லது, இப்பொழுது இவளை நான் நேரிற் கண்டேன்; இவளையிட்டு என் அண்ணன் இனியுங் கவலைப்படாவண்ணம் இப்பொழுதே அண்ணன் மாளிகைக்குக் கொண்டு செல்கின்றேன்; இந்திரன் இங்கே இவளைத் தனியே இருக்கவிட்டு இந்த நேரம் எங்கோ போயினான்; இதுவே வாய்த்த சமயம்" என்று சொல்லிக்கொண்டு இந்திராணி இருக்குமிடத்திற்கு முற்பட்டுச் செல்வாளாயினாள்.

அசமுகி தன் தோழியுடன் விரைந்து தன்னை யணுகுவதைக் கண்ட அயிராணி அச்சங்கொண்டு சிந்தை கலங்கி யமனைக் கண்ட உயிர்போல் உள்ளம் பதைத்து, "ஐயகோ! இங்கு வேகமாகவரும் இவள அசுரப்பெண்ணோ, அரக்கியோ, பேய் மகளோ, பெண் பூதமோ, காளியோ இன்னாளெனப் புலப்படவில்லையே" என்று சொல்லிக்கொண்டு தன்னிருக்கைவிட்டெழுந்துபோக முயன்றாள்; அங்ஙனமெழுந்தஇந்திராணியை "சகியே, நில்" என்று அசமுகி எதிர்சென்று தடுத்து இதமாகச் சொல்லுகின்றாள்: 'விண்ணவர் மகளிர்க்கெல்லாம் அரசியே, உனக்குநிகரான பேரழகோடு கூடிய பெண்கள் விண்ணுலகிலும் இம் மண்ணுலகிலும் மற்றைதெவ்வுலகிலும் இல்லையென்பதைநீயுணராய், நான் அறிவேன்; அழகிற் சிறந்தவளென்று சொல்லப்படும் அந்த இலக்குமியும் உனக்கு ஒப்பல்லள; இவ்வாறான பெண்நலன்களோடுபொருந்திய உன் இயல்பையும் பெருவனப்பும் தீயிற் கெறித்த கிலாப்போல் அறுபவிப்பாரின்றிப் பயனற்றுப்போக, அழகுகுன்றி மேனிவாட ஏன் இப்படி வீணே தவங்கிடக்கின்றாய்; ஆயிரத்தெட்டண்டங்களுக்கும் ஏக சக்கராதிபதியாகிய என் னண்ணன் உன்னைக் காணவேண்டி அங்கேயிருந்து தவம்புரிகின்றான்: நீ எக்காரணம்பற்றியோ இந்தக் காட்டிலிருந்துகொண்டே தவம்புரிகின்றாய்; உண்மடமை யிருந்தபடி யென்னை, இற்றைவரையில் உனக்கு நாயகனாயிருக்கும் இந்திரன், உன் பேரழகுக்கும் பெண் நலனுக்கும் ஏற்றவனல்லன்; தன் பேரழகு தனக்குத் தெரியாதென்பர்: அந்த நியாயத்தினாற்றான் நீ அவ்விந்திரனுக்கு இல்லாளாய் வாழ உடன்பட்டாய்; என் அண்ணனுக்கும் உன் கணவனுக்குமிடையேயுள்ள ஏற்றத்தாழ்ச்சியைச் சொல்லுகிறேன், கேள்:—

எங்கள் அண்ணனெனிலோ, ஆயிரத்தெட்டண்டங்களையும் ஏக சக்கராதிபதியாயிருந்து பரிபாலனஞ்செய்பவன்: உன் கணவனென்று சொல்லப்படும் இந்திரனெனிலோ, விண்ணுலகமொன்றுக்குமாத்திரம் அரசனாயிருந்து அதனையும்இப்போது என் அண்ணனிடம் பறிகொடுத்தான்; எங்கள் தமயன் இராசாதி ராசனாயிருந்து தேவர்களையும் பணிகொள்கிறான்; உன் புருஷன் அவனுக்குக் குறுநேவல் செய்து அலுத்து ஒளித்தோடிவந்து காந்திருக்கிறான்; எங்கள் மூத்தோன் பரமசிவனிடத்தில் அழியா வரம் பெற்றவன்; உன்னாயகன் சிலகால ஆயுள் பெற்றவன்; எங்கள் அண்ணன் இசையோடு கூடியவன், உன் காதலன் தீராவசையோடு கூடியவன்; அவன் என்றும் இன்பத்தை யனுபவிக்கின்றான், இவன் தீராத் துன்பக்கடலுள் மூழ்கியுள்ளான்; அவனை எல்லாரும் வணங்குவார்; இவன் எல்லாரையும்தான் வணங்குகிறான்; இன்னும் எங்கள் மூத்தோனுக்குரிய பெருமைகள் பல, இவனுக்குரிய சிறுமைகள் எண்ணில. ஆனதால், அழகிற் சிறந்த அயிராணியே, என் அண்ணனுடைய தொண்டுசெய்து அலுத்து ஒளித்திருக்கும் உந்த இந்திரனைவிட்டு, என்னுடன் இப்பொழுது வருதி, நான் என் அண்ணனிடம் உன்னை யழைத்துக்கொண்டுபோய்ச் சேர்க்கின்றேன்; கனியிருக்கக் காயை நாடாதே, வாழ்வு உன்னை எதிர்பார்த்தவண்ணமிருப்ப, நீயாகத் தாழ்விலே கிடந்து தடுமாறுதே, இந்த இதோபதேசங்களை யெல்லாம் நான் உனக்குச் சொல்வது என் நன்மைகுறித்தல்ல; நீ நல்லாய் வாழவேண்டுமென்ற கருணைபற்றித்தான சொல்லுகிறேன்; எங்கள் அண்ணனாருடைய பராக்கிரமத்தையும் அதிகாரத்தையும் அழியாச் செல்வத்தையும் தவவலிமையையும் இவைபோன்ற ஏனைய பெருமைகளையும் நான் உள்ளபடி எடுத்துச்சொல்லுதல் முடியாது. அவற்றை நீ நேரில் வந்து கண்டாற்றான் நிசமென நம்புவாய்; முப்பத்து

தொடர்ச்சி 6 ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKASA PRESS

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாரமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்துஸு
புரட்டாதிமீ கசஉ செவ்வாய்கிழமை

ஒற்றுமையற்ற நிலை

இலங்கைத் தேசாதிபதியின் அநுமதிப்படி இலங்கைப் பரிபாலனப்பொறுப்புப் பிரதமராகிய திரு. செனனுயக தமது மந்திர சபைக்காகிய பிரதிநிதிகளைத் தெரிந்துகொண்டார்; இப்படித் தெரிந்தெடுத்த மந்திரிமாருட் பதின்மர் ஐக்கியதேசீயக் கட்சி மூலம்தேர்தல் செய்யப்பட்ட பிரதிநிதிகளாவர்; இப் பதின்மருள்ளும் ஒருவர் இஸ்லாமியர்; இனி, சுயேச்சைக் பிரதிநிதிகளுள்ளும் திரு. சுந்தரலிங்கம், திரு. சிற்றம்பலமென்னும் இருவரும்மந்திரிப் பதவிகளை வகிக்கலாயினர்; ஐக்கியதேசீயக்கட்சி மந்திரிமாருள், பிரதம மந்திரியாகிய திரு. செனனுயகவின் மகன், மருமக்கள் முதலிய இனசனங்களுஞ் சேர்ந் துள்ளனரென்றுஞ் சொல்லப்படுகிறது. தமிழ்ப் பிரதிநிதிகளாயுள்ள இருவருள் ஒருவர் வவுனியாப் பகுதிப் பிரதிநிதியாவர்; மற்றவர் மன்னார்ப் பகுதிப் பிரதிநிதியாவர்; வடஇலங்கைக்குந் தமிழ் மக்களுக்கும் பிரதான பட்டினமாகவுள்ள யாழ்ப்பாணப் பட்டினத்துப் பிரதிநிதியேனும், யாழ்ப்பாணப் பெரும் பிரிவில் உள்ள பாகங்களுக்குரிய பிரதிநிதிகளுள் எவரேனும் இப்புதிய பாராளுமன்றத்தில் மந்திரிப் பதவியைப் பெற்றிலர்; இப்படி நேர்ந்தமைக்குக் காரணம் பலரறிந்த இரகசியம்.

ஐக்கிய தேசீயக் கட்சியினர் போக ஏனையகட்சியினரெல்லோரும்இப்பொழுது மந்திரிப் பதவி முதலிய அதிகாரபதவிகள் வழங்கப்படாது புறக்கணிக்கப்படலாயின; இதனாலும் இன்னுஞ் சில ஏதுக்களினாலும், தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர் இலங்கை இந்தியக் காங்கிரஸ் கட்சியினர் சமசமாஜிகள், பொதுவுடைமைக் கட்சியினர் முதலாம் ஏனைய கட்சியினரெல்லாரும் ஒருங்கு சேர்ந்து எதிர்க்கட்சியைத் தாபிக்க முயற்சிசெய்யலாயினர்; சுருங்கச் சொல்லுகில், நெற்பயிர் முளைக்கவே அதனோடு புல்லும் முளைத்தவாறு திரு செனநாயகாவைப் பிரதமராகக்கொண்ட பாராளுமன்றம் அங்குரிக்கவே, எதிர்க் கட்சிகளும் அங்குரிக்கலாயின; இந்தப் புதிய பாராளுமன்றத்திற்குப் பாலாருஷ்டம் முதலிய தோஷங்க ளுண்டோ என்று பலர் பயப்படுகின்றனர்.

இந்தப் பாராளுமன்றப் பரிபாலனப் பொறுப்பு இலேசானதன்றென்பதையும், நூற்றுக்கு மேற்பட்ட வருடங்களாக இலங்கைச் சிங்களர் தமிழர் இஸ்லாமியா முதலாயினோரிடத்து இல்லாததென்பதையும், இப்பொழுது இலங்கைப் பிரதமராக வந்திருக்கும் திரு. செனனுயக மாத்திரமல்ல, அவர் குழுவினரல்ல, இலங்கையில் வசிக்கும் சிங்களர், தமிழர், இஸ்லாமியர், இலங்கையிந்தியர், பறங்கியர், அயிரோப்பியர் முதலிய சகல சாதியினரும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு அதற்கிசைய ஒற்றுமைப்பட்டு உழைக்க வேண்டும்; பரஸ்பரம் மாறுபாட்டோடும், அழுக்காறு முதலிய தீயகுணங்களோடும் தனித்தனி தம் நயங் கருதுதலோடும் உட்பகைகளோடும் தொடங்கப்படும் பரிபாலனமுறை ஒருபோதும் இந்நாட்டு மக்களுக்குச் சுவதந்திரத்தைத் தரப்போவதில்லை; துரியோதனன் முதலாம் நூற்றுவர் செய்த பரிபாலனம்போல இப்பரிபாலனம் முடியினும் முடியுமெனலாம். அரிதிற் கிடைத்த சுயராச்சிய முறையான பரிபாலனத்தைப் பிணக்குப்பட்டுக் கொண்டு வீணே கைவிடுதல் புத்தியின்பாற்படாது.

மேலும், ஒவ்வொரு கட்சியின் தலைவர்கள் விஷயங்களைத் தீர ஆலோசித்து நாட்டின் விருத்தியை உத்தேசித்து ஐக்கியப்பட்டு உழைக்க முயன்றாலும், அந்த அந்தக் கட்சியிரைச் சேர்ந்த குழுவினர் தத்தம் தலைவர்களை ஒற்றுமை வழியிற் போகவிடாது தடுக்கின்றனரென்றுஞ் சொல்லப்படுகின்றது.

ஆனால் எக்கட்சிப் பிரதிநிதிகளும், அவ்வக் கட்சியினரின் குழுவினரும், இலங்கையிலுள்ள எல்லாப் பகுப்பு மக்களும் எந்த நேர்மூஞ் சிந்திக்க வேண்டியதொன்றுண்டு; இந்த இலங்கையோ இப்பொழுது பொருளாதாரம் மிகவுங் குறைந்த நிலையையடைந் திருக்கிறது; உணவுப் பொருள் உடைப்பொருள், இன்னும் மானிட வாழ்க்கைக்கு இன்றியமையாப் பொருள்கள் எல்லாவற்றிற்கும் பெரிதும் முட்டுப்படுகின்றது; பொருளாதாரமற்ற வறிய நிலையிற் கூடிய நாட்டிற்குச் சுவாதீனமிருந்தென்ன? வேறு பல நலன்கள்தாம் இருந்தென்ன? யாதும் நன்மை யில்லையாம்; ஆதலினால் இலங்கையில் இப்பொழுது உண்டுபட்டுள்ள எல்லாக்கட்சியினரும் தங்கடகிடையேயுளள பிணக்குக்களை ஒருவாறு ஒழித்து ஐக்கியப்பட்டுப் பரிபாலன விஷயத்தில் உழைத்தாலல்லாமல் இந்தப் புதிய பாராளுமன்ற முறையினால் உண்மையானசுயாதீனம் வரப்போவதில்லையென்பதாம்.

தலைவர் யார்?

இலங்கைப்பாராளுமன்றத்து ஜனப்பிரதிநிதிசபைக்குத் தலைவராகயார் இருப்பது என்பது ஓர் பெரும் பிரச்சினையாக இருக்கிறது. ஐ. தே; கட்சியினர் மிஸ்ரர் மொலமுரேயை ஆதரிப்பர். இடதுசாரிகள், தமிழ்க் காங்கிரஸ் வாதிகள் முதலியோர் மிஸ்ரர் ஸ்ரீநிசங்காவை ஆதரிப்பர். எந்தக் கட்சியில் அதிக பலம் இருக்கிறது என்பது இத்தேர்தலால் ஒருவாறு அறியலாம்;

சுதந்திரம் - அது என்ன?

தன்மானம் காக்கும் சாதனமே அது

சுதந்திராநாட்டிலே மக்களாக வாழ இளைஞர்கள் முயலவேண்டும். சுதந்திரம் என்பது என்ன என்பதைத் துருவித் துருவி ஆராய்ந்தால், மக்கள் அவரவர் தன்மானத்தோடு வாழ வழிசெய்யும் அரசியலமைப்பு முறைதான் சுதந்திரம் என்ற முடிவுக்கே வரவேண்டியவர்களாக இருக்கிறோம், ஒருநாடு மற்றொரு நாட்டுக்கு அடிமைப்பட்டு இருக்கக்கூடாது என்கிறோம். நாடு சுதந்திரம் அடைந்துவிட்டால் அந்த நாட்டிலுள்ளேயே ஒரு ஜனத்தார் மற்றொரு ஜனத்தாருக்கு அடிமைப் பட்டிருக்கக்கூடாது என்ற எண்ணம் எழுகின்றது அப்படி விடுதலை ஏற்பட்டு விட்டாலும் ஒருவருடைய தன்மானத்தை மற்றொருவர் பறிக்கக்கூடாது என்ற எண்ணம் தோன்றும். எனவே சுதந்திரம் என்பதன் ஆணிவேர் சுயமதிப்பு அல்லது தன் மானம் என்பது சொல்லாமலேயே விளங்குகிறது, இந்த தன்மான உணர்ச்சி மக்களிடையே பரவவேண்டும். இந்த உணர்ச்சி பரவினால் தான் மனிதனை மனிதன் இழிவுபடுத்தும் மடமையும் ஒழியும். இந்த மடமை ஒழிந்துவிட்டால் மனிதனின் கடமை என்ன என்பது தெளிவாகத் தெரிந்துவிடும். மனிதன் கடமையை உணர ஆரம்பித்துவிட்டால் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் ஆகிய இவை தானாக அகலும் இவை அகன்றுவிட்டால் மக்கட் சமுதாயத்திடம் அன்புநிலவ ஆரம்பிக்கும். அன்பு நிலவ ஆரம்பித்துவிட்டால் கொடுமைகள் அகலும். இங்ஙனம் கொடுமைகள் அகற்றப்பட்டு மக்கள் மக்களாக வாழவேண்டும் என்பதுதான் சுதந்தர வாழ்வு அதற்கு அடிப்படைதான் தன்மானம்.

எனவே, இளைஞர்களே நீங்கள் தன்மானத்தை உயிரினும்மேலாகப் பாதுகாத்தல்வேண்டும். உங்களுடைய சுய மதிப்பை நீங்களே காப்பாற்றிக்கொள்ளவேண்டும். நீங்கள் உங்கள் சுயமதிப்பைக் காப்பாற்றிக்கொள்ள நினையாதவரை பிறர் உங்களுடைய சுயமதிப்பைக் காப்பாற்றுவார்கள் என்று நினைப்பது தவறு.

தன்னுடைய மானத்தைத் தானே காப்பாற்றிக்கொள்ளுகிறவனைக் கண்டால் யாருக்குமே கொஞ்சம் அச்சம் இருக்கத்தான் செய்யும். யார் ஒருவன் தன் மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்று நினைக்கிறானோ அவன் ஒரு துறவிக்குச் சமம். சாதாரணமாக நம்மால் துறவிகளென் றழைக்கப்படுவோர் காவியுடை தரித்து இவ்வுலக வாழ்வை வெறுத்து, அவ்வுலகம் என்பதோர் கற்பனை உலகத்தை அடைய அவாக்கொண்டு இருப்பார்கள் ஆனால் தன் மானத்துறவி அப்படிப்பட்டவனல்ல; அவ்வுலகம் என்ற சொல்லே அவனுக்குப் பிடிக்காது. அவன் இவ்வுலக வாழ்க்கையை வெறுப்பவனுமல்ல; வாழ்க்கை வாழ்வதற்கேயென்று சொல்லுபவனதான் தன்மானி. தான் வாழாவிட்டாலும் பிறரை வாழவைக்க வேண்டு மென்பதிலும், அதற்காக கஷ்ட நஷ்டங்களை ஏற்கவும், வாழ்க்கையைக்கூட சிதைத்துக் கொள்ளக்கூடியவன் தன்மானி; அப்படிப்பட்டவனுக்கு அரசாக்கம், சட்டம், பொலீஸ், பாதுகாப்பு முதலியன தரும்புக்குச் சமம், அவனை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை அவனுடைய கண்களுக்கு மாங்குயில்கூவிடும் பூஞ்சோலையாகத்தெரியும். மக்களின் மனத்தைக் காக்க அவன் எதையும் துணிந்து செய்வான். பழியை ஏற்கப் பயப்படமாட்டான். இவைதான் ஒரு தன்மானத் தோழரின் இலட்சணங்கள். இவை மிகைப்படுத்திக் கூறுபவையல்ல. அழகுக்காக எழுதுவதுமல்ல.

"இப்படிப்பட்ட காடுமுரடான வாழ்க்கையையா இளைஞர்கள் ஏற்கவேண்டும்?;" என்று சிலர் கருதலாம். ஆம், ஏற்கத்தான் வேண்டும் முடியாவிட்டால் முடிந்தவரை ஏற்கவேண்டும்; ஏற்க சித்தமாக இருந்தால்தான் ஒரு புத்துலகை சிருஷ்டிக்கமுடியும. நான் கூறுபவை வெறுங் கனவல்ல, உண்மை. பல இளைஞர்களிடம் இந்த தன்மான உணர்ச்சிதான் சிலரிடம் கோபமாகவும், பலாத்காரமாகவும் வெளிப்படுகிறது. அப்படிப்பட்டவர்கள் அந்த கோபத்தைச் [illegible] என்ற நிலையில் நின்று போரிட ஆரம்பித்தால் அழகான முடிவுகளை நாட்டில் காணமுடியும். பல துறைகளிலும் உயிரைக் கொடுத்தேனும் மக்களுடைய உரிமையைக் காப்பது என்ற எண்ணம் வலுத்து, அப்படிப்பட்டவர்கள் ஒரு தனிக் கூட்டத்தினராகவும் ஆகிவிட்டால் நாட்டில் எப்படிப்பட்ட அழகிய, நேர்மையான முடிவுகளைக் காணலாம் என்பதை இளைஞர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும் தியாகம் தியாகம் என்று அடித்துக்கொள்ளுகிறோமே, தன் மானத்துக்காகத் தியாகம் செய்தவர்கள் நம்மில் எத்தனைபேர் இருக்கக்கூடும்? எனவே இவற்றையெல்லாம் இளைஞர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். இதற்குமேல் அதிகமாகத் தன்மானம் என்ற பொருள்பற்றி எதுவும் சொல்லுவதற்கில்லை. வாழ்க்கையில் உழலுபவர்கள் சிறப்பாக இதனைக் கூர்ந்து கவனிக்க வேண்டும் வறுமையால் வாடுபவர்கள், முதலாளித்வத்தால் தாக்கப்படுபவர்கள், உத்தியோகம் பார்க்குமிடங்களில் அதிகார, ஆதிக்க மமதையால் அவமானப் படுத்தப்படுபவர்கள் முதலியவர்கள் இதனைக் கவனிக்கவேண்டும். ஆனால் கடைசியாக ஒன்றுகூற விரும்புகிறேன். தன்மான உணர்ச்சி என்பது அகங்காரம் கொள்வதல்ல; அடங்காப் பிடாரித்தனமல்ல; நீதிக்குப் புறம்பாகப் போவதல்ல; வழிதப்பி செல்வதுமல்ல; அன்பாயிருக்க வேண்டும். ஆனால் அடிமையாக இருக்கக்கூடாது. இதுதான் தன்மானத்தின் அடிப்படைத் தத்துவம். எனவே இளைஞர்களே எல்லோரிடமும் அன்பாயிருங்கள்; ஆனால் அடிமையாயிராதீர்கள். 'நாம் யாருக்கும் குடியல்லோம்" என்பதை மறவாதீர்கள். உயிர் தித்திப்பை எண்ணிடாதீர்கள். உரிமைக்காகப் போராடுங்கள். உயிரைவிட மானம் ருசியுள்ள பண்டம் என்ற மகத்தான உண்மையை மறவாதீர்கள். இந்த தன்மான உணர்ச்சியின்மீது தான் "வீரம்" கொள்ளவேண்டும், அதுதான் உண்மையான வீரம்.

வீரம் என்று சொல்லப்படுவதெல்லாம் புஜபல பராக்கிரமசாலிகளாக இருந்து போர்செய்யும் திறமைதான் என்று எண்ணுவது தவறு தன் மானத்தைக் காக்கவேண்டும் என்ற வைராக்கியம்தான் வீரம். உள்ளத்தின் உறுதிதான் வீரம். பலசாலிதான் வீரமுடையவனாக இருக்க வேண்டும் என்பதல்ல. தன்மான உணர்ச்சியுடைய அத்தனைபேரும் வீரர்கள்தான். அவர்கள் உருவத்தால் சிறியவர்களாகக் காணப்படலாம். ஆனால் அவர்கள் உள்ளம் வைரம் பாய்ந்த உள்ளம். அவர்களுடைய சிந்தனாசக்தி பயங்கரமானது. அப்படிப்பட்டவர்கள் வீறுகொண்டு எழுந்தால் அதன் பலன் என்னாகும் என்று சொல்ல முடியாது. தன்மான உணர்ச்சி உள்ளவர்கள் அத்தனைபேரும் எரிமலைகள் என்பதை ஆதிக்கவெறி பிடித்தவர்கள் உணரவேண்டும். இளைஞர்கள் இப்படிப்பட்ட வீரத்தைத்தான் கொள்ளவேண்டும். விவேகம் கலந்த தன்மான உணர்ச்சிதான் வீரம். இத்தகைய வீர உணர்ச்சியைப்பெற்றிருக்கும் இளைஞர்கள் அதை வீணாக்காமல் சமயம் வரும்போது உபயோகிக்கவேண்டும். அதற்கேற்றபடி வாழ்க்கையை அமைத்துக்கொள்ளவேண்டும்.

—தமிழ்மணி.

இலங்கைக்கு யப்பான்துணை

இருபது லட்சம் யார் கொண்டயப்பான் துணி சில தினங்கட்குமுன் கொழும்பில் இறக்குமதியாகி, இப்பொழுது விற்பனவுக்குக் கொடுக்கப்படலாயிற்றென புடைவைப் பகுதிக் கட்டுப்பாட் டதிகாரியாகிய மிஸ்ரர் M. F. de S. ஜயரத்தின தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதார புருஷன் காந்தி

அவர் பிறந்த தினம் அக்டோபர் 2

(கொழும்பு ஸ்ரீ க. இராமச்சந்திரன்)

"ஆதிமறை யாவுமுணர்ந் தடங்கி னேன்காண்
ஐம்புலத்துச் சேட்டைகளை யடக்கி னேன்காண்
ஜாதிமத பேதமது தவிர்த்தோன் றான்காண்
சமரசசன் மார்க்கத்தை நிறுவி னேன்காண்
நீதிநெறி நின்றொளிரு நிமலன் றான்காண்
நிவந்தவுப சாந்தநிலை நிறைந்தோன் றான்காண்
காதியுடைக் கைத்தொழிலிற் காதலோன்காண்
காந்திமகான் காணவனென் கண்ணுளானே"



காந்தியுகத்தில் வாழும் பாக்கியம் பெற்ற புண்ணிய சீலர்களே! இந்தவாரம் காந்தி ஜயந்திவாரம்! அடுத்த வியாழக்கிழமை (2-10-47) அவர் பிறந்த புண்ணிய தினம். அன்று அவருக்கு எழுபத்தொன்பதாவது வயசு ஆரம்பிக்கப்போகின்றது. சுதந்திரம் பெற்ற இந்தியாவில் இப்புனித தினமானது இந்த ஆண்டு தொடக்கம் ஆசினர் விடுதலை நாளாகி விட்டது. 'காந்தி பிறந்தநாள் உலகில் தர்மத் தலைகாட்டியநாள், சாந்தி பிறந்த நாள்' என்று உலகினர் எல்லோரும் கொண்டாடும் காலமுஞ் சீக்கிரம் வரும். இரண்டு வாரங்கட்கு முன் சென்னை சட்டசபையில் முஸ்லிம் அங்கத்தவர்களின் தலைவரான இஸ்மெயில் அவர்களும் வங்காள மாஜி பிரதம மந்திரியான சூரவர்த்தி அவர்களும் அடிகளின் சமரசப் பணி குறித்துக் கூறிய மொழிகள் இந்த நம்பிக்கைக்கு உரந்தருகின்றன.

உலக சரித்திரத்தில் இம்மகானைப் போல அரைநூற்றாண்டுக்குமேல் சமூகத் தொண்டும், தேசத் தொண்டும், உலகத் தொண்டும், சமரச மார்க்கத் தொண்டும் புரிந்த ஒருவரைக் காண்பதரிது. அவரது இருபத்தைந்தாவது வயசில் ஆரம்பித்த தன்னலம் நீத்துப் பிறர் பொன்னலம் பேணும் பணியின் வட்டமானது நாளடைவில் விரிந்து விரிந்து இன்று மனித சமூகம் முழுவதையுமே அணைத்து நிற்கிறது முதலில் நாம் அவரை தென்னாபிரிக்காவில் புழுக்கள்போல் நசுக்கப்பட்டுத் துடித்த இந்திய மக்களின் மானத்தைக் காப்பாற்றிய தீனரக்ஷகராகக் காண்கின்றோம். பின்னர் அவர் பாரததேச ரக்ஷகராகக் காட்சியளிக்கிறார் இந்திய அரசியல் துறையில் புகுந்தபின் அவர் முதல் தடவை தமிழ்நாட்டுக்கு வந்தபோது, கவிக்குயில் பாரதியார், "வாழ்க நீ எம்மான்" என்று நல்வரவு கூறிய பாட்டில் "தாழ்வுற்று வறுமையிஞ்சி விடுதலை தவறிக்கெட்டுப் பாழ்பட்டு நின்ற பாரத தேசந்தன்னை — வாழ்விக்க வந்த காந்தி' என்று மஹாத்மாவை தேசரக்ஷகராகவே கண்டார். இந்தியா சுதந்திரம் பெற்றதும் அவர் உலக ரக்ஷகராகவும், ஜகத்குருவாகவும் மாறுந் தோற்றம் எங்கள் கவிக்குயிலின் திவ்விய திருஷ்டிக்குத் தென்படாம லிருக்கவில்லை. கீழ்க்கண்ட பாட்டில் அந்த உன்னத காட்சியையும் அழகுபெற அமைத்துள்ளார்:—

"தன்னுயிர்போலே
தனக்கழிவெண் ணும்
பிறனுயிர் தன்னையுங் கணித்தல்
மன்னுயி ரெல்லாங் கடவுளின் வடிவம்
கடவுளின் மக்களென் றுணர்தல்
இன்னமெய்ஞ்ஞானத் துணிவினை மன்றங்
கிழிபடுபோர் கொலை தண்டம்
பின்னியே கிடக்கும் அரசிய லதனிற்
பிணைத்திடத் துணிந்தனை
பெருமான்"

இப்பாடல் இயற்றப்பட்டு கிட்டத்தட்ட முப்பது ஆண்டுகட்கு முன்னாகும். அதிலடங்கிய அற்புத அத்யாத்மதத்துவமும் காந்தியடிகளின் ஆத்ம சக்தியின் நுட்பமும், இரண்டாவது உலக யுத்த இறுதியில் அணுக்குண்டு வீக்சுக்குப் பின்னரேயே தெற்றென விளங்கி நிற்கின்றன.

எண்பதாவது வயசை எட்டிப் பார்த்துக்கொண்டிருக்கும் இத் தள்ளாடு கிழவனாரின் வெளித்தோற்றம் நூதனமானது. 'அவர் திருக்குறள் வடிவம்' எனச் சுருக்கமாய்ச் சொல்லிவிட்டார் யோகி சுத்தானந்தர்; ஆம், சாலவும் பொருத்தமுடைத்து. "வையத்தில் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையுந்தெய்வத்துள்வைக்கப்படும்" என்ற வள்ளுவர் வாக்குக்கு இலக்காக இன்று வேறு யாரைத்தான் கண்டுபிடிக்க முடியும்? தரித்திர நாராயணர்கட்காகவும் ஹரிசனங்கட்காகவும் ஓயாதுழைத்து இளைத்த, தியாகச் சுமையால் வளைந்த, பொதுநலத் தவத்தால் வாடிவதங்கிய மஹாத்மாவின் உடல் தொண்ணூறு ருத்தல் மாத்திரம் நிறை கொண்டதாயினும், அதனுள் அவர் உலகினும் பெரிய உள்ளத்தினையும், மலையினும் பெரிய மாண்பையும், கங்கையினும் வேகமாகப் பாயும் அருள் ஊற்றையும் அடக்கியுள்ளார். தம்மைத்தரிசிப்போரின் துயர் பறக்கவும் கவலை நீங்கவும் புன்சிரிப்பை யருள்வதற்காய் அவர் தம்பொக்கைவாயைத் திறக்கும்போதும்நாம் காண்பது தியாகத்தின் மாண்பையேயாம். தென்னாபிரிக்காவில் தம் தாய்நாட்டின் மதிப்பைப் பேண அவர் முதலில் கொடுத்த பலி தம் முன்வாய்ப் பற்களன்றோ? மஹாத்மாவின் வெளித் தோற்றம் போலவே அவரின் உளத் தோற்றமும் அற்புதமானது. சின்னஞ்சிறு வயசில் அவரின் தாய்ச்சியான அரம்பை சொல்லிக் கொடுத்த,

ஸ்ரீராம் ஜயராம் ஜயஜயராம்
ரகுபதி ராகவ ராஜாராம்
பதீத பாவன சீதாராம்,

என்ற மந்திரத்தை அவர் இன்றுங் காலை மாலை பிரார்த்தனை வேளைகளில் தவறாது செபஞ் செய்வதிலிருந்தே அவரது குழந்தையுளத்தை எவரும் நன்கறியலாம்.

"சத்தியமே வெல்லும். சத்தியத்திற்கு மாறானது ஒருநாளும் வெற்றியடையாது கடவுளை அடையும் பாதை சத்தியம் என்கிற தளவரிசையால் பரப்பப்பட்டுள்ள ராஜபாட்டை". இதுவே உபநிடதசாரம். பகவத் கீதையின் மூன்றாம் அத்தியாயம் விளக்கும் நிஷ்காமிய கர்ம யோகமே உருவெடுத்தாற்போன்று விளங்கும் காந்தியடிகள் இந்தராஜபாட்டையிலேயேதமது நீண்ட வாழ்க்கை யாத்திரையை நடாத்தி வந்துள்ளார். சிறுவயசில் அவர் உள்ளத்தில் பசுமரத்தாணிபோற் பதிந்தது அரிச்சந்திரன் சரிதையாகும். அவரிடம் உலகு கண்டு பாராட்டும் தியாகம், தைரியம், வீரம், பெருமை எல்லாவற்றிற்கும் மூல சக்தியாயிருப்பது மேலே எடுத்துக்கூறப்பட்ட வேதாந்தக் கொள்கையேயாம். அத்தோடு அவர் அஹிம்சா தர்மத்தையும் புத்தம்புது முறையிற் பிணைத்துள்ளார். தாம் போதிக்கும் சுத்த, சுதந்திர, சமத்துவ, சன்மார்க்க நெறியை 'அஹிம்சை' என்னும் ஒரு மொழியிலேயே தொகுத்துக் கூறுகிறார். ஹிம்சை (இன்னாசெய்தல்) மக்களுக்குரிய விதியன்று; விலங்கின் குணமேயாகும்; அது பழிக்குப்பழி வாங்குதலிலே முடியும். ஆகையால், தீமையைத் தீமையால் ஒருக்காலும் அழிக்கமுடியாது. நன்மையால்தான் அதுஒழியும். பிறரிழைக்கும் தீமைகளைப் பொறுப்பதாலும் தீங்குகளை மறப்பதாலும், தீங்கு செய்பவர்களை மன்னிப்பதாலும் ஒருவன் தன்னைத்தான் தூய்மைப்படுத்திக் கொள்வதோடு துஷ்டர்களைத் தீய மார்க்கத்தினின்றும் விலக்கி நல்வழிப்படுத்துகிறான். அடிகளின் போதனையும் சாதனையும் இதுவே. சமணசமயத் தொடர்பில் அவரிடம் உதித்த இந்த அஹிம்சாதர்மமானதுதென்னாபிரிக்காவில் தமிழ்மக்கள் சிலரின் உறவால் கிடைத்த திருக்குறள் பயிற்சியினால் உறுதிபெற்றதெனலாம் தூய இல்லறஞானியான திருவள்ளுவரால் தமது நீண்ட அனுபவங்களைக்கொண்டு இயற்றப்பட்ட குறளின் மணிகளான,

"இன்னாசெய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்."

"இன்னா செய்தார்க்கும் இனியவே
செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு"

இந்த நான்கு வரிகளும், அவரைப்போலவே சாதனையில் பரீட்சைப்பார்த்தவற்றையே போதனை செய்யும் தனிச்சிறப்பு வாய்ந்த மஹாத்மாகாந்தியின் கவனத்தை ஈர்த்ததில் வியப்பொன்றுமில்லை.

அடுத்தடுத்து இரண்டு அகோர உலக யுத்தங்கள் நடந்தும் மனிதனின் மனந்திரும்பியபாடில்லை மூன்றாவதாக அணுக்குண்டுப்போர் சீக்கிரம் வருமோ என்ற அச்சத்துடனே மாந்தர் வாழ்கின்றனர். இன்றுள்ள அரசியற் கிளர்ச்சிகளும், சமூகக் குழப்பங்களும், பொருளாதாரச் சிக்கல்களும், காலதேவியின் துணைகொண்டு உலகம் ஒரு புதுவாழ்க்கை நெறியைக் கோரிச் செல்வதையே வற்புறுத்துகின்றன. அற்பமதியுள்ள மாந்தர் இந்த உண்மையை இன்றும் உணரவில்லை பழைய பொருளாதாரக் கொள்கைகள், தனிப்போகபோக்கிய உரிமைகள், சுயநலச் சம்பிரதாயங்கள் இனித் தலைகாட்டவே முடியாது. தனிபுடைமையை நீக்கிப் பொதுடைமையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் உலகை அருளுடைமைப்பாதையில் திருப்பும்பொறுப்பு சுதந்திரம்பெற்ற பாரததேசத்தின் அத்யாத்ம தத்துவத்தைச்சார்ந்ததாகும்,முடியரசு(Monarchy) குடியரசு (Republic) சமுதாயிகம் (Socialism) சமாசமம் (Communism) எதுவாயினும் அடிப்படையில் அறமும், அருளும், ஆன்மநேயமும் இல்லாவிடில், உலகுக்கு அது ஒருகாலும் அமைதியைத் தராது. ஆகாயக்குண்டோடு திருப்தியடையாது அணுக்குண்டு வீசும் அசுர ஆட்சியாகவே முடியும் இருபத்தைந்து ஆண்டுகளாக நடாத்தியசுதந்திரப்போரில் அணுக்குண்டிலும் பார்க்க ஆயிரமடங்கு வீறுபெற்ற ஆத்மபலம் மஹரிஷிகளின் வழித்தோன்றிய பாரத சமுதாயத்தினிடம் இயல்பாகவே அமைந்துள்ளதென்ற பெரும் உண்மையை எவரும் மறுக்கொணாத, மறக்கொணாத முறையில் காந்தியடிகள் விளக்கியுள்ளார், அவரைத் தூற்றியவர்களெல்லாம் இன்று போற்றுகின்றனர். அவர் காட்டும் பாதையில் சென்றாலன்றி உலகில் சமாதானமும் சாந்தியும் நிலவாதென்பதே மேல்நாட்டு அறிஞர் பலரின் அபிப்பிராயமுமாகும். இந்த அரிய உண்மையையே நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளை,

"சத்திய வாழ்வினை நாடுதற்கும்
சாந்தப் பெருமைகள் கூடுதற்கும்
உத்தம காந்தியின் உபதேசம்
உலகுக் கோதும் நம்தேசம்"

என ஆவேச உணர்ச்சியுடன் பாடியுள்ளார்.

"சாந்திநிலையருளத் தண்ணளியால்
வந்துதித்த
காந்தி கழலடிகள் வாழியவே—
காந்தி
யடிகளைப் பின்பற்று மனைவோரும்
வாழி
படியகத்தே பூழிபல"

யுத்தம் முளுமா?

ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பிரசாரணம்

ஐ. தே. ஸ்தாபனத்துக்கு இந்தியப் பிரதிநிதிகள் கோஷ்டிக்குத் தலைமைதாங்கிச் சென்றிருக்கும் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிதர் சென்றவாரம் அமெரிக்க ரேடியோமூலம் ஓர் பிரசாரணம் செய்தார். ஐரோப்பாவில உள்ள மக்கள் பஞ்சத்தினால் வாடுவதைப்பற்றிப் பரக்கப் பேசப்படுகிறது. ஆனால் ஆசியாக்கண்டத்திலே மக்கள் ஆயிரக்கணக்கில் அல்ல, கோடிக்கணக்கில் பசியால் நோயால் வாடி இறப்பதைப்பற்றிச் சிந்திப்பார் எவருமில்லை என்று அவர் தம் பிரசாரணத்திற் குறிப்பிட்டார். மேலும் அவர் கூறியதாவது:

"இன்று இந்தியா விரும்பி நாடுவது சமாதானம், சுதந்திரம், நீதி என்பனவற்றையே. மற்றும் தேசங்கள் எல்லாவற்றிலும் பார்க்க மேலே குறிப்பிட்டனவற்றை இந்தியாவே அதிகம் விளைகிறது. நீதியும், சுதந்திரமும் அற்ற ஓர் நாட்டில் இருப்பதால் உள்ள கெடுதிகளை, மற்றெல்லா நாடுகளிலும் பார்க்க இந்தியா நன்கு அறியும்.

"இந்தச் சந்தர்ப்பத்திலே, யுத்தப்பேச்சை நடத்திவருகிறார்கள். இது மிகவும் துக்கரமான விஷயம். இந்தப்பேச்செல்லாம் வேறு விஷயங்களுக்கான பிரசாரம் என்றே நினைக்கிறேன். ஆனால் இந்தப் பேச்சு ஆபத்தைத்தர ஏதுவாகும். இதனை விடாது தொடர்ந்து நடாத்திக்கொண்டே போனால் "ஓநாய், ஓநாய்' என்று சொன்னவன் கதைபோல, நிச்சயமாக, யுத்தம் மூளவும் கூடும்.

"யுத்தத்தை எவ்வாறு வராமல் தடுக்கலாம், அணுக்குண்டை அபிவிருத்தி செய்வதன் மூலம் யுத்தம் வருவதைத் தடுக்கலாம் என்று சிலர் கூறுவர். ஆனால் யுத்தத்துக்கான மூலகாரணங்கள் எவை என்பதை நாம் ஆராய்ந்து அவற்றை நீக்க வேண்டும். மூன்றாவது உலகயுத்தம் நிகழுமானால் மனிதவர்க்கமே பூண்டோடு அழியவேண்டியதுதான். அதிற் சந்தேகமேயில்லை"

அங்கே நடந்தது என்ன?

மந்திரசபை அமைப்பு முன் விவாதமா?

[நமது அரசியல் நிருபர் எழுதுகிறார்]

மிஸ்டர் சென்னையக்கா தமது மந்திரசபையை அமைத்துவிட்டார். அந்த மந்திரசபையில் தமிழ்க் காங்கிரஸ் வாதிகள் சேர்க்கப்படாமலிருப்பதை ஒட்டி மிகுந்த ஏமாற்றம் ஏற்பட்டிருக்கிறது. எது எப்படியிருந்தபோதிலும், தமிழ்மக்களிற் பெரும்பகுதியினர் தம் பிரதிநிதிகளாகக் காங்கிரஸ் வாதிகளையே தெரிந்தனுப்பியிருக்கின்றனர். அப்படியிருப்பவும், மிஸ்டர் சென்னையக்கா அவர்களை மந்திரசபையிற் சேர்க்காது விட்டமை அவருடைய குறுகிய மனப்பான்மையையே காட்டுகிறது எனக் காங்கிரஸ் வாதிகள் கூறுகின்றனர்.

தேர்தல் முற்றாக முடிந்ததும் கூடப்பட்ட ஐ. தே. கட்சிப் பிரதிநிதிகள் மகாநாடு ஒன்று கொழும்பில் கூடப்பட்டதாகவும், அதில் மிஸ்டர் சென்னையக்கா ஐ. தே. கட்சியின் நிலைமையை விளக்கி, தனியே அது அரசாங்கம் நடத்த முடியாதாகையால் வேறும்கட்சிகளின் உதவியை நாட வேண்டும் என்றும், தமிழ்க் காங்கிரசின் ஒத்துழைப்பை நாடினால் என்ன என்று [illegible] தெரிகிறது. மிஸ்டர் சென்னையக்காவின் ஆலோசனை சமுகமளித்த ஐ. தே. கட்சிப் பிரதிநிதிகள் பலர்க்கு அதிர்ச்சியை மாத்திரமல்ல, ஆத்திரத்தையும் கொடுத்ததென்றும், அவர்களில் மிகப் பெரும்பான்மையினர் தமிழ்க் காங்கிரசுடன் ஒத்துழைப்பதென்ற பேச்சையே எடுக்கக்கூடாதென்று கூறியதாகவும்தெரிகிறது. ஸ்ரீமான்கள் கொத்தலாவலை அபய விக்கிரம ஏ. பி. ஜெயசூரியா என்பவர்கள் இந்த ஆலோசனையை மிகவும் கடுமையாக எதிர்த்ததாகத் தெரிகிறது. அப்படி மிஸ்டர் சென்னையக்கா தமிழ்க் காங்கிரசின் ஒத்துழைப்பை நாடுவாரானால், ஐ. தே. கட்சியைச் சேர்ந்த 30 க்கு மேற்பட்ட அங்கத்தவர் மிஸ்டர் சென்னையக்கான் தலைமைப் பதவியை உதறித்தள்ளி வேறுகக் கருமம் ஆற்றப்போவதாகவும் தெரிவித்தனர் என்று நான் நம்பத்தகுந்த இடத்திலிருந்து அறிகிறேன். சிங்களரையும் சிங்களத் தலைவர்களையும் தேர்தற் காலத்திலும் அதற்கு முன்னும் ஜீ. ஜீ யும் அவருடைய கட்சியாரும் தூற்றித் திரிந்தனர் என்றும் அப்படிப்பட்ட அவர்களுடன் ஒத்துழைத்து மந்திரசபை அமைப்பதிலும் பார்க்க, சமசமாஜிகள் முதலாம் இடதுசாரிக் கட்சியினர் விதிக்கும் நிபந்தனைகளை ஏற்று ராஜ்யம் நடாத்துதல் மேல் என்று இவர்கள் வற்புறுத்தியதாகத் தெரிகிறது.

தொடர்ச்சி 4 ம் பக்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை

59-வது ஆண்டு மகாசபைக் கூட்டம்

இச்சபையின் 59-வது வருடாந்தக்கூட்டம் நிகழும் சர்வசித்துஷு புரட்டாதிமீ ககஉ (5—10—47) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரித் தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.

நிகழ்ச்சிகள்:

1. விபூதிப் பிரசாதம் அணிந்து கொள்ளுதல்.
2. தேவார பாராயணம்.
3. சென்ற வருடாந்த மகாசபைக்கூட்ட வர்த்தமானத்தைப் படித்தல்.
4. 59-வது ஆண்டறிக்கைப் பத்திரம் படித்தல்.
5. சைவப்பிரகாச யந்திரசாலையினதும், சபையினதும், புண்ணிய நாச்சி மடதருமத்தினதும் 1946—47க் குரிய வரவு செலவுக் கணக்குக்களைப் படித்தல்.
6. 1947—48க் குரிய வரவுசெலவுத் திட்டத்தைப் (Budget) படித்தல்.
7. சிற்றுண்டி வழங்கல்.
8. திரு. சி. நாகையா அவர்களின் பிரேரணைகளைப்பற்றியோசித்தல்.
9. அடுத்த வருஷத்துக்குரிய புதிய உத்தியோகத்தர்களையும், திருவாகசபை அங்கத்தவர்களையும் தெரிவுசெய்தல்.
10. எழுத்துமூலம் முந்தியே காரியதரிசிக்கு அறிவிக்கப்பட்ட விஷயங்களிருப்பின் அவற்றை யோசித்தல்.
11. தேவார பாராயணம்.

யாழ்ப்பாணம்,
25—9—47.

மு. மயில்வாகனம்,
காரியதரிசி.

Mis 143 30, 3—10—47

சபைக்குரிய அங்கப்பணங் கட்டாதவர்கள் வாக்குரிமைக்கு அருகராகார்.

திருச்சி ரேடியோ

புதன் அக்டோபர் 1

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 ஏ சாவித்திரி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 குழல் இசை இசைத்தட்டு 8-30 திருக்கோடிகாவல் ஆர் கோவிந்தராஜபிள்ளை பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஏ சாவித்திரி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 ஏ. சாவித்திரி பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 திருவாலங்காடு என் சுந்தரேச ஐயர் வயலின் 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்திரகானம் இசைத்தட்டு 7 15 முன்னேட்டம் ஒலிச்சித்திரம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 மதுவிலக்கு மதராஸ் அஞ்சல் 8 திருவாலங்காடு என் சுந்தரேச ஐயர் வயலின் 8-30 திருக்கோடிகாவல் ஆர் கோவிந்தராஜபிள்ளை பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 ஆங்கிலப் பேச்சு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9 45 ஐரோப்பிய சங்கீதம் இசைத்தட்டு 10-30 முடிவு.

வியாழன் அக்டோபர் 2

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7 30 கே ஸி தியாகராஜன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 காலை இசை இசைத்தட்டு 8-30 பி சரோஜினி வீணை 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 பெண்ணுலகம் 2 தமிழில் செய்திகள் 2-05 மாணவர்களும் 2-15 கல்வி ஒலிபரப்பு 2.45 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5 பி சரோஜினி வீணை 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்திரகானம் இசைத்தட்டு 7-15 அஹிம்சை முறை 7-30 தமிழில் செய்திகள் 7-45 நாகம்மா, கமலா பாட்டு 8-30 பேச்சு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 பாமாலை 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 இருகுரல் இசை இசைத்தட்டு 10 சத்திய விஜயம் நாடகம் 10-30 முடிவு.

வெள்ளி அக்டோபர் 3

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 அம்பலப்புழை பி கிருஷ்ணன்நாயர் பாட்டு 8 ஆங்கிலத்தில் 8 15 திருச்சி வாத்யகோஷ்டி 8-30 பி எஸ் கிருஷ்ணமூர்த்திபாட்டு 9 முடிவு

1 கதம்பம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 அம்பலம்புழை பி கிருஷ்ணநாயர் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 பி எஸ் கிருஷ்ணமூர்த்தி பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2—45 முடிவு.

மாலை 5 பாரசாலை பி பொன்னம்மாள் பாட்டு 5-40 குரான்ஷரீப் விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 பாரசாலை பி பொன்னம்மாள் பாட்டு 7-30 தமிழில் செய்திகள் 7-45 நாட்டு வைத்தியம் 8 பி எஸ் வீருசாமிப்பிள்ளை நாகஸ்வரம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 குரல்வகை இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 10 அறிவிப்புகள் வானிலை 10 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 10 30 முடிவு.

அங்கே நடந்தது என்ன?

(3—ம் பக்கத் தொடர்ச்சி)

விவாதம் இப்படியாக நடக்கையில் சுயேச்சை வாதிகள் பிரச்சினை வந்தது சமசமாஜிகளின் ஒத்துழைப்பை நாடுவதிலும் பார்க்க சுயேச்சை வாதிகளைக் கவர்வது மேலாகும் என்று சிலர் ஆலோசனை கூறினர். அந்த ஆலோசனையின் பயனாக சுயேச்சை வாதிகள் மந்திரசபையில் இடம் பெற்றதும், பின் நடந்த விஷயங்களும் எல்லாரும் அறிந்தனவே.

இப்போது சுயேச்சைவாதிகள் 19பேர் உளர். இவர்களில் 11 அல்லது 12பேரின் ஆதரவு மந்திரசபைக்கு நிச்சயமாகக் கிடைக்குமாம். இந்தியக் காங்கிரஸ பிரதிநிதிகளும், மிஸ்ரர் சென்னையக்காவை இப்போது எதிர்க்கமாட்டார்களாம் அப்படியானால் எதிர்க்கட்சியின்பலம் 30க்குமேல் இருக்கமாட்டாது என்று சொல்லப்படுகிறது.

தமிழ்க்காங்கிரசின் எதிர்காலம் என்ன என்பதை நிர்ணயிக்கக் கூடிய சீக்கிரம் ஓர் மகாநாடு கூட்டப்படும் என்று அறிகிறேன். வடமாகாணம், கீழ்மாகாணம் என்னும் இரண்டிலும் காங்கிரசின் பலத்தை அதிகரிப்பித்து, அடுத்த தேர்தலில் காங்கிரஸ் பிரதிநிதிகளையே இவ்விரு மாகாணங்களிலுமிருந்து அனுப்பும் ஏற்பாடுகள் இப்பொழுதிருந்தே செய்யப்படுமாம் இதனைவிட, யாழ்ப்பாணம் நகரசபைக்கான தேர்தல் அடுத்த ஆண்டில் நிகழவிருக்கிறது. நகர வட்டாரங்கள் அனைத்திலும் காங்கிரஸ் பிரதிநிதிகளையே நிறுத்தி அவர்களுக்கு வெற்றி பெற்றுக் கொடுத்தலும் காங்கிரசின் அடுத்தவேலையாம். அப்படிக் காங்கிரஸ் நகரசபை ஸ்தானங்களைக்கைப் பற்றுமானால், யாழ்ப்பாணத்தின் முதல் மேயர் ஸ்ரீ ஜீ.ஜ பொன்னம்பலமாகலாம்.

தொண்டன்

ஆசிரியர்
கெ. ஆறுமுகநாவலர்

மாதவெளியீடு

இந்துமதத்தின் வளர்ச்சி ஒன்றையே இலட்சியமாகக்கொண்டு வீய ஆவணி முதல் வெளிவருகிறது. தமிழ் நாட்டுச் சமய நலன் கருதும் அறிஞர்களால் எழுதப்பெறும் கட்டுரை, கவிதை, இலக்கியம், இசை, சரித்திரம், ஆராய்ச்சி, நாடகம், படவிமர்சனம், சமய சந்தேகத் தெளிவு முதலியவைகளைத் தாங்கிப் பிரதி தமிழ் மாதமும் முதல் வாரத்தில் பிரசுரமாவது. இந்து சமயத்தின் சாத்திரக் கருத்துக்களை எவர்க்கும் இனிது எளிதில் விளங்க ஐயமின்றி எடுத்துரைப்பது. ஒவ்வொரு இந்துவும் ஆவசியகம் படித்துப் பயன் பெறவேண்டியது.

-:விபரங்களுக்கு:-

தொண்டன் காரியாலயம்
நாகர்கோவில் P.O S. திருவிதாங்கூர்

சந்தா விபரம்

வருடமொன்றுக்கு	ரூ 5 0-0
ஆறுமாதங்கட்கு	ரூ. 3-0-0
தனிப்பிரதி	ரூ 0 8-0

தொண்டனின் யாழ்ப்பாணப் பிரதிநிதி
K. M. S. மாணிக்கவாசகப்பிள்ளை அன்கோ
356 K. K. S. ரோட் யாழ்ப்பாணம்

Mis 141 30—3—9—47

யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சந்தி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திறகு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் நடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகோள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-47 (தி)

கந்தசாமி வைத்தியர்
அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையும் தீர்க்கும். பித்தக்கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற்புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளை மாற்றி நல்ல பசி உண்டாக்கும். மேகம் மேகத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பனிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும். கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கனை பாண்டு இராக்காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறிபவர்கள் காற் களஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்

கால் ருத்தல் விலை ரூபா 5-00
வி. பீ. பி யில் அனுப்புவோம்.

விலாசம்:

ஆயுர்வேத சிவசோதி மெடிக்கல்ஹோல்
— வல்வெட்டித்துறை —

Std 25 7-7-47—30-6-48 (செ)

பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேகபுஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருருத்தல் விலை ரூபா 25
அரைருத்தலுக்கு ரூபா 12-50
கால்ருத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை
நி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to 1—4—48

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலபிராமணர்செய்யும் தகாச்செயல் சில

[இவ்வியாசம் சிவபக்தி யோழுக்கம் பூண்ட ஒரு பிராமணர் எழுதியுதவியது.]

இந்துசாதனப் பத்திரிகாசிரியர்க்கு ஓர் விஞ்ஞாபனம்:—

ஐயா,

உலகின்கணுள்ள நான்கு வருணங்களுள்ளும் பிராமண வருணமே மேலானதென்றும் ஆசார ஒழுக்க முதலியவைகளாற் சிறந்ததென்று அக்காலத்துப் பெரியார்கள் கூறியிருக்கின்றார்கள். அதுவன்றியும் வள்ளுவரும் 'அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மைபூண் டொழுகலால்" என்றார்; அவர்களே மற்றை மூன்றுசாதியாருக்கும் வழிகாட்டிகளாய் இருக்க வேண்டியவர்கள். அவ்வாறாயவர்களில் அனேகர் நல்லொழுக்கம் நன்னடை, ஆசாரானுட்டான முதலிய நித்திய கருமங்களை விடுதலும், அநாகரிகப் பழக்கமும் சைவ முறைகளுக்கு மாறான நடையுமுடையவர்களாய்க் காணப்படுகிறார்களே; இவர்கள் செய்யும் கோயிற் பூசை விஷயத்திலும் வியாபாரம் ஏற்பட்டுவிட்டது; சாமிக்குச் சாத்தச் சந்தனமரைக்கவேண்டியதை விட்டுக் கடையிலுள்ள சந்தண வில்லைகளே உபயோகிக்கின்றனர்; வாங்கிக் கொடுக்கும் சந்தனக் கட்டை, அபிஷேகத்துக்கெனக் கொடுக்கும் பனிநீர், அத்தர், சாதனாதித் தைலம், கர்ப்பூரம், சருக்கரை, தேன், கற்கண்டு முதலியவைகளும், பால், தயிர், பழவகைகள் ஆகிய இவைகளைத் துர்விநியோகஞ் செய்கிறார்கள். பொருள்களைக் கடையில் கொண்டுபோய் விற்கிறார்கள் இன்னுஞ் சில அடாத கருமங்களைச் செய்யத் தொடங்கிக்கொண்டார்கள்.

இதுவன்றியும் பிராமணக் குருமாரிற் சிலர் மனைவி கருப்பவதியாயிருக்கப் பிரதிட்டை மகோத்ஸவம் முதலிய கிரியைகளைச் செய்கிறார்கள். இம்மட்டா?

சைவக் குருமார் செய்துவரும் அந்தியேட்டியென்னும் கிரியையும் தாங்களே செய்து வருகிறார்கள். தங்களிலும் தாழ்ந்த சாதியாருக்குக் குருவாக இருந்து அந்தியேட்டி செய்த பிராமணக்குரு ஒருவர் அன்றிறவே ஓர் ஆலயத்தில் மகோற்சவத்திற்காகக் கருமாரம்பம் செய்து மறுநாள் துவஜாரோகணமும் செய்திருக்கிறார். அந்தியேட்டியிற சம்பந்தப்பட்ட இவருக்குக் குறித்த சிறிது காலத்திற்கு ஆசௌசமுண்டல்லவா? இன்னும் நாட்செல்லச்செல்ல தம் சாதியினரல்லார்க்கு இப்படியான பிராமணக் குருமார் செத்த வீட்டிற்குப் போய்ப் பிரேதக்கிரியையும் செய்வார்கள்போலும்; பிராமணக் குருதம் சாதியல்லாத தாழ்ந்த சாதியாருக்கு அந்தியே டி செய்து ஆன்மயோசனம் செய்வதால் இவனுடைய பிரம தேஜசு கெட்டு இவனிடத்திலுள்ள மந்திர தேவதைகள் இவனை விட்டு விலகிவிடும். உலகம் முழுதும் தெய்வாதீனமாக இருக்கிறதென்றும், அத்தெய்வம் மந்திராதீனமாக இருக்கிறதென்றும், ஆகையால்பிராமணன் தனக்குத் தெய்வமென்று ஸ்ரீ கிருஷ்ண பகவான் சொன்னார். அவ்வாறு மகத்துவம் வாய்ந்த இவர்கள் இவ்விதமான அடாத செயல்களைச் செய்தால் இவர்களில் மந்திரதேவதைகள் ஏது? இவர்கள் நித்திய பூசைதானும் செய்யக்கூடாது. இதுவன்றியும் பிரதிட்டை மகோத்ஸவ முதலியவைகளைச் செய்விக்கும் கோயிலதிகாரிகள், அந்தியேட்டி செய்யும் பிராமணக் குருமாரை விட்டு, அது செய்யாத குருமாரைத் தேடி அவர்களைக் கொண்டு பிரதிட்டை முதலியவைகளைச் செய்வித்தால் அவை நற்பலனைக் கொடுக்கும்; இவர்களது அநர்த்தத்தால் ஆலயங்களில் தேவசாந்நித்தியம் குன்றிப்போக, கள்வர்களுக்கு இடம் கிடைக்கிறது; முன்னர் புலோலி முத்துக்குமாரசுவாமிக் குருக்கள், கொழும்பு சோமாஸகந்தக் குருக்கள், வண்ணார்பண்ணை வைத்தியேசுவரன் கோயில் அம்பிக் குருக்கள், வைத்தியநாதக் குருக்கள், ஆதியோர் எனைய வருணத்தார்க்கு அந்தியேட்டி செய்யாதவர்கள்; அவர்கள் செய்த கும்பாபிஷேகங்கள் நீடித்த காலமிருந்து சித்தியைக் கொடுத்துக் கொண்டேயிருக்கின்றன என்று காலம் கடந்த முதியோர்கள் கூறுகின்றார்கள்; சிராத்தம் செய்த தினத்திலும், சிரார்த்தத்தில் வரிக்கப்பெற்றுத் தானம் வாங்கிய தினத்திலும், பிரேதத்தைத் தீண்டினாலும் பார்த்தாலும், பாவமென்னும் சௌரம் செய்வித்ததினத்திலும் இவ்வாறாகிய நாட்களிற் பிராமணன் சிவலிங்கத்தைத் தீண்டடாதென்று அகோரசிவாசாரியர் செய்தபத்ததிகூறுகின்றது. இதுஇவ்வாறானால்அந்தியேட்டி செய்பவர்பூசை செய்பவும் நைமித்திகமாகிய கிரியைகளைச் செய்வது எப்படி? ஆகையாற் பத்திரிகாசிரியரைக் கேட்பது, பிராமணரை அந்தியேட்டி செய்யாமல் பத்தி பகப்படவேண்டும், அன்றேல் அவர்களைக் கோயிற் கிரியைகளிற் சேராது விலக்கி நடக்கச்செய்வதோடு,

14 மந்திரிகள்

கடமை ஏற்றனர்

மிஸ்ரர் சேனனாயக்கா இலங்கை யரசியல் நிருவாகப் பொறுப்பை ஏற்றுத் தமது சகாக்களான மந்திரிகளை நியமித்து, தேசாதிபதியின் அங்கீகாரத்தையும் பெற்றுவிட்டார். மந்திரிகள் பின்வருவோராவர்.

மிஸ்ரர் சேனனாயக்கா (பிரதமர்; வெளிநாட்டு வியவகாரம், பாதுகாப்பு)

மிஸ்ரர் S. W. R. D. பண்டாரநாயக்கா (உதவிப்பிரதமர் ஸ்தல ஸ்தாபனங்கள், சுகாதாரம்)

மிஸ்ரர் ஜோர்ஜ் E. டீ. சில்வா (கைத்தொழில்)

மிஸ்ரர் ஜே. எல். கொத்தலாவலை (போக்குவரத்து)

மிஸ்ரர் ஜே. ஆர். ஜெயவர்த்தனா (நிதி)

சேர் ஒலிவர் குணத்திலகா (உள்நாட்டு வியவகாரம், கிராமப் புநருத்தாரணம்)

ஜனாப் ரீ. பீ. ஜயா, (தொழிலாளர் பகுதி, சமூகசேவை)

மிஸரர் நாகவெல (கல்வி)

,, டட்லி சேனனாயக்கா (விவசாயம்)

ஸ்ரீ ஸி சுந்தாலிங்கம் (வர்த்தகம்)

மிஸ்ரர் ஏ. ரத்னாயக்க (உணவு, ஒத்துழைப்புப்பகுதி)

ஸ்ரீ. ஸி. சிற்றம்பலம் (தபால், தந்திப்பகுதி)

டக்ரர் எல். ஏ. ராஜபக்ஷி (நீதிநிர்வாகம்)

மிஸ்ரர் ஆர் எஸ். எஸ். குணவர்த்தனா (பிரதம கட்சி அமைப்பாளர்)

இந்த 14 மந்திரிகளையும்விடப் பின்வருவோர் உதவிமந்திரிகளாக நியமனம் செய்யப்பெற்றிருக்கின்றனர்:

மிஸ்ரர் ஜோர்ஜ் ஆர். டீ சில்வா (நீதிமந்திரிக்கு) ஜனாப் எம். எஸ். காரியப்பர் (உள்நாட்டு மந்திரிக்கு) மிஸ்ரர் ஏ. ஈ. குணசிங்க (தொழிலாளர்பகுதிக்கு) மிஸ்ரர் பீ. பீ. புலாங்குலம (விவசாய மந்திரிக்கு) ஜனாப் எச். எஸ். இஸமெயில் (உணவு மந்திரிக்கு) மிஸ்ரர் H. de. Z. ஸீவர்த்தனா (கைத்தொழில் மந்திரிக்கு) மிஸ்ரர் சைமன் அபயவிக்கிரம (போக்குவரத்து மந்திரிக்கு) மிஸ்ரர் ஏ. பீ. ஜயசூரிய (தபால் தந்திப்பகுதி மந்திரிகு)

பின்வருவோர், மந்திரிகளின் கிரந்த காரியதரிசிகளாகலாம் என்று ரைம்ஸ் பத்திரிகை கூறுகிறது:

ஸ்ரீ கே சோமசுந்தரம், மிஸ்ரர் ஈ. வீ. ஆர் சமரவிக்கிரம, மிஸ்ரர் E, W. கன்னங்கரா, மிஸ்ரர் ஸீ. ஈ. ஜோன்ஸ், மிஸ்ரர் ஆர் எஸ். வீ. பூலியர், ஸ்ரீ வீ. குமாரசுவாமி ஸ்ரீ கே. வைத்தியநாதன், மிஸ்ரர் எல். ஜே. டீ. செனிவரத்தின, மிஸ்ரர் ஆர். என். பொன்ட்.

திருத்திக்கொள்க

[சென்ற செவ்வாய்க்கிழமைப் பிரசுரத்தில் வெளிவந்த கந்தபுராணம் 51-ம் திருவிருத்தத்தின் ஈற்றிலே "அவன் மொய்ம்பிலெய்தான்" என்பதற்கு "இந்திரனுடைய மார்புக்கிலக்காக....செலுத்தினார்" என்த் தவறாக வந்ததை "தோளுக்கிலக்காகச்செலுத்தினா"ரெனத் திருத்தி, அத்தொடர்பாக எழுதியுள்ள விருத்தியுரையையும் தவிர்த்துவிடுக.]

கந்தபுராணக் கவி நுட்பம்

திருவிளையாட்டுப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் வாய்க்கேட் டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளிபிடப்பட்டுள்ளன.

இந்தப் படையோர் சிறுபுற்படு கோள்கை போல்
எந்துற் றிடவற் புகமெய்தினர் மற்றை வானோர்
கந்தக் கடவுள் சிலையிற்கணை யொன்று பூட்டித்
தந்திக் கிறைவன் றடம்போன் முடிதள்ளி யார்த்தான்.

(இந்திரன் செலுத்திய) வேற்படையானது சிறுபுல்லினிபல்புகொண்டு சுப்பிரமணியப் பெருமான் முன்னிலையில் வந்துசேர்தலும், அதனைக் கண்ட தேவர்களாயுள்ளோர் ஆச்சரியமடைந்தனர்: (அதன்பின்னர்) கந்தசுவாமியார் தமது தெய்வத்தன்மை பொருந்திய வில்லின்கண்ணே ஒரு அம்பைத் தொடுத்து (ச்செலுத்தி) ஐராவத மென்னும் யானைக்குத் தலைவனாகிய இந்திரன் சூடியிருந்த பெரிய பொன்னாலாகிய கிரீடத்தை வீழச் செய்து ஆரவாரித்தார் என்பது கருத்து.

பறங்கின் முதலியனவும் புல்வருக்கத்தைச் சேர்ந்தனவாதலின், அங்ஙனமன்றி அறுகுபோன்ற சிறிய புல்லின் இயல்பையடைந்து என்பார். "சிறுபுற்படு கொள்கைபோல்" என்றார்: வேற்படைக்குரிய திண்மை வேகம் முதலியன கெட்டு முருகக்கடவுள் முன்னிலையில் நொய்ம்மையுற்று மெல்லென வந்ததென்க; வந்துற்றதென்றமையினாலே இப்படையும் சமீபத்தில் வந்து சேர்ந்ததன்றிப் பெருமானுடைய திருமேனியிற் பட்டதென்று சொல்லுதற்கிடமில்லை யென்க; அங்ஙனம் பட்டிருப்பின் "மட்டேறுபோதற் படுகின்றுழி" என முன்னர் இப்படலத்தின் 47-ம் திருவிருத்தத்திற் கூறியாங்கு ஆசாரிய சுவாமிகள் கூறியிருப்பரென்க. (53)

துவசந் தனையோர் கணைகொண்டு துணித்து மார்பிற்
கவசந் தனையோர் கணையாற்றுகள் கண்டு விண்ணோன்
அவசம்பட வேழ்கணை தூண்டினன் ஆழிவேண்டிச்
சிவசங் கரவேன் றரிபோற்றிய செம்மன் மைந்தன்.

(இந்திரனுயர்த்திய) கொடியை ஒரு அம்பினாலே துண்டித்து, அவன் மார்பிலே இட்டிருந்த கவசத்தை (சட்டையை) ஒரு அம்பினாற் சிதைத்து, தேவர்கோனாகிய இந்திரன் மயக்கமுறும்படி ஏழுபாணங்களைச் செலுத்தினார் (யாரென்றால்) சக்கரப்படையைப் பெற விரும்பிச் சிவசங்கர என்னுஞ் சிவநாமங்களைச் சொல்லித் திருமால் அர்ச்சித்துத் துதித்த சிவபிரானுடைய திருக்குமாரராகிய முருகமூர்த்தி யென்பது கருத்து.

இந்திரனுக்கு மேற்பட்டவர் பிரமதேவர், அவருக்கு மேற்பட்டவர் திருமால், அப்படிப்பட்ட மேம்பாட்டோடு கூடிய திருமால் பூசித்துத் தவங்கிடந்தபோது சுதரிசன மென்னுஞ் சக்கரப்படையை அத்திருமாலுக்கு அருளிய முழுமுதற்கடவுள் பரமசிவனாவர்; அப்பரமசிவனுடைய திருக்குமாரராகிய சண்முகத் தெய்வத்திற்கு இந்த இந்திரனுக்கு இவ்வாறான தண்டனை செய்தல் ஒரு பொருளல்ல வென்பதைக் குறிப்பால் எடுத்துக் காட்டவேண்டியே ஆசாரிய சுவாமிகள் "ஆழிவேண்டிச் சிவசங்கர என்று அரிபோற்றிய செம்மன் மைந்தன்" என அடைகொடுத்துக் கூறினரென்க; செம்மல் பெருமையிற் சிறந்தோன்: சிவபெருமான் திருமாலுக்கு ஆழி ஈந்தமை "மாலுக்குச் சக்கரம் அன்று அருள் செய்தவன் மன்னியதில்லை" எனத் திருப்பல்லாண்டில் வருதல் காண்க.

[ஆழிவேண்டி - தமது நிதி கிருத்தியத்திற்கு உபாதானமாயுள்ள (சலந்தரனை வதைபுரிந்ததாகிய) சுதரிசன மென்னுஞ் சக்கரத்தைப் பெறும்படி வேண்டித் திருவீழி மிழலையிற் சிவசங்கர என்று அர்ச்சித்து அரிபோற்றிய; துவசம் - இடிக்கொடி] (54)

தீங்கா கியவோ ரேழுவாளியுஞ் செல்ல மார்பின்
ஆங்கார மிக்க மகவானயர் வாகி வீழ்ந்தான்
ஓங்கார மேலைப் பொருண்மைந்த னும்ப ரேனோர்
பாங்காய் வளைந்து பொருதார் படுகின்ற தோரார்.

இடையூற்றைச் செய்வனவாகிய ஏழு பாணங்களும் தன் மார்பிலே புதைந்தவுடனே, நான் எனது என்னும் அகங்கார மமகாரங்களோடு கூடியவனாகிய இந்திரன் மயக்கமடைந்து வீழ்ந்து மாண்டான்; அப்பொழுது ஏனைய தேவர்கள் பிரணவப் பொருளாக விளங்குகின்ற பரமசிவனுடைய திருக்குமாரராகிய முருகவேளை, தங்களுக்கு நேரப்போகும் ஆபத்தினை யுணராதவர்களாய்ச் சமீபித்துச் சூழ்ந்து சமர்செய்தார்கள் என்பது கருத்து.

இந்திரனுயிருக்கு ஆபத்து விளைக்கும் பாணங்களாதலின் தீங்காகிய வாளியென்றார்: இந்திரன் மார்பிற்கிலக்காக சண்முகத்திறைவன் வாளிகள் செலுத்தியது அவனகத்துக் கொண்டுள்ள ஆங்காரத்தை யடக்கி மறக்கருணை புரிந்து பின்னர் அவனுக்கு ஞானமளித்தற்பொருட்டென்க; வீழ்ந்தான் என்பதற்கு மாண்டு வீழ்ந்தான் என்றேனும் வீழ்ந்து மாண்டானென்றேனும் பொருள்கொள்க; ஓங்கார மேலைப்பொருள்மைந்தன் என்பதற்குப் பிரணவப் பொருளாய் விளங்கும் குமாரமூர்த்தியெனப் பொருள் கொள்ளினும் பொருந்தும். உம்பரேனோரென்பதை ஏனோரும்பரெனக் கொண்டு கூட்டி எஞ்சிய ஏனைய தேவர்கள் எனப் பொருள்கொள்க; பாங்காய் வளைந்தார் - சமீபித்துச் சூழ்ந்தார்; படுகின்ற தோரார் - தமக்கு நேரவிருக்கும் ஆபத்துக்களை யுணராதவராய், இனிமேல் நடக்கவிருப்பனவற்றை அறியாதவர்களாய்; ஓரானமைக்குக் காரணம் இத்தேவர்களைப் பீடித்துள்ள அணவத் தடிப்பென்க; எதிர்காலத்திற் சொல்லவேண்டியதைப் படுகின்றதோரார் என நிகழ் காலத்திற் சொல்லியது நிச்சயம்பற்றி யென்க. (55)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் ஏன் ஹிந்துவானேன்

முதலாம் பக்கத் தொடர்ச்சி

பொருள்களிலிருந்து தெரியவருகிறது.

பாவம் என்பதுபற்றி இந்து கொண்ட அபிப்பிராயம்; பாவம் என்பது தன்னயத்தால் வருவது. சாத்தான் விளைவிப்பதன்று. இயற்கைக்கு மேம்பட்ட ஒருசக்தியினிடமிருந்தும் வருவதுமன்று. மனிதனிடம் தெய்வத்தன்மை உண்டென்பதையும் ஒவ்வொரு உயிரிலும் இறைவன் உறைகின்றான் என்பதை அறியாததால் வருவது பாவம். நம்மை நாம் உண்மையாய் உணராதவரை நம்மை உடலென்றும் மனமென்றும் எண்ணிவிடுகிறோம். அதனால் வருவது சுயநலம். நம்மில் இறைவன் குடிகொண்டிருக்கிறானென்று அறிந்ததும் தன்னயம் போய்விடும். பாவம் வாராது. தெய்வ உணர்ச்சியெனும் தீ பாவத்தைக் கொளுத்திச் சாம்பலாக்கும். இதுவே இந்துக்களின் பாவத்தைப் பற்றிய கடைந்தெடுத்த கொள்கையாகும். ஒரு கொள்கை உண்மையென்று ஏற்படுதற்குமுன் அதன் ஆரம்பத்திலிருந்து கவனித்து ஆதாரங்களைச் சீர்தூக்கி அக் கொள்கையை தம் நாட்டில் வழங்கும் உயர்ந்த லட்சியங்களோடு ஒப்பிட்டுப் பார்த்து தேர்ந்தெடுத்த கொள்கைகளையே பின்பற்றவேண்டியது மனிதர் கடமை.

என் முடிவான கருத்து

விவேகானந்தருடைய வாழ்க்கை வரலாறும் சிகாகோ பிரசங்கங்களும் நான் இந்தமதத்தைப்பற்றி எண்ணியிருந்த தப்பபிப்பிராயத்தைப் போக்கப் பெரிதும் உதவின. திருச்சபை வரலாறுகளிலிருந்து அன்பால் அகிம்சையால் உபதேசிக்க வேண்டிய மதக் கொள்கைகள் பலாத்காரத்தால் பிறர்மீது திணிக்கப்பட்டு வந்திருக்கிறதை நான் கண்டேன். உற்பத்தி விஷயத்தில் பகுத்தறிவிற்கும் விஞ்ஞானத்திற்கு முரண்பட்ட கொள்கைகளையே தன்னகத்தில் கொண்டது. சரித்திரபூர்வமாக மதப் பிரசாரத்திற்காக பலாத்காரத்தைகையாளாத மதம் எங்காவது இருக்குமாயின் அது இந்து மதமாகத்தான் இருக்க வேண்டும். மதப் பிரசாரத்தின்பொருட்டு தன்னைக் களங்கப்படுத்தாத மதம் இந்துமதமேதான். இது ஆராய்ந்த முடிவாகும்.

இந்து மதத்தில் விளக்கப்பட்டுள்ள கொள்கைகள் பல கவர்ந்தன எனினும் இந்துமதத்தை உடனே ஏற்றுக்கொள்ள சில மூட்டுக்கட்டைகளும் இல்லாமலுமில்லை. ஹிந்துமதத்தின் களங்கமான தீண்டாமைஎனும் கொடிய கொள்கை இடையில் சில சுயநலமிகளால் புகுத்தப்பட்டிருக்கிறதென்பதை எந்த அன்னிய மதத்தினன் கண்ணையும் உறுத்துமென்பதை நேயர்கள் அறிந்ததே நேரடியாக உடன் பின்பற்றத் தடையாக நின்ற தீண்டாமைப்பேயும் மகாத்மா காந்தியடிகளின் சலியா உழைப்பினால் இந் நாட்டைவிட்டுத் துரத்தப்பட்டது. என் மனத்தை உறுத்திய மூட்டுக்கட்டையும் நீங்கிற்று. மூட்டுக்கட்டையால் அமுக்கப்பட்ட ஆவாவும் வெளிக்கிளம்பிற்று. மதம் மாற எண்ணினேன். "தொண்டன்" ஆசிரியர் கெ. ஆறுமுகநாவலர் (27-6-47ல்) ராஜபாளையம் பெத்தவநல்லூர் மாயூரநாத சுவாமி தேவஸ்தானத்தில் வைத்து ஸி எம். எஸ். கிறிஸதவ சமயத்திலிருந்து இந்து மதத்திற்கு சமய தீட்சை பெற்று மாற்றப்பட்டேன்.

ஐயனார் மகத்துவம்

முதலாம் பக்கத் தொடர்ச்சி

முக்கோடி தேவர்களும் தேவமகளிரும் குற்றேவல்செய்ய, பிரமவிஷ்ணு உருத்திரன் முதலானோர் வாழ்த்த அசுரர்கள்போற்ற, ஏனைய உலகினர் பணிய ஆழியாவரம் பெற்று ஆயிரத்தெட்டு அண்டங்களையும் பலயுக காலம் ஆண்டு வரும் மன்னாதிமன்னர் போற்றும் மகுடரத்தினமாக விளங்கும் எங்கள் அண்ணன் பக்கலில் அவனுடைய ஆருயிர்த் துணைவியாக இரத்தின சிம்மாசனத்தி லிருந்து வாழும் வாழ்க்கையைப் பெண்ணாய்ப் பிறந்தவள் ஆரும் வெறுப்பாரா? தேவமகளிர்க ளெல்லார்க்குந் திலகம்போல் விளக்கும் சகியே, இன்னுஞ் சொல்லுகிறேன் கேள்: எங்கள் அரிய அண்ணர் உன்னை ஒருமுறை தம் கண்ணாரக் காண்பரேல், மகாலட்சுமிக்கு நிகரென்று சொல்லப்படும் பட்டத்துத் தேவியாகிய பதுமகோமளை தன்னையும் மறந்துவிடுவர்; ஏனைக் காமக்கிழத்தையரனைவரையும் வெறுத்திடுவர், உன்னையே சிரோரத்தினமாக மதித்து உடன் வைத்துப் போற்றுவர்; இது சரதம், ஆனதனால், பெண்ணரசியே, விண்ணரசியே, காலதாமசஞ் செய்யாது என்னுடன் வருதி" யென்றாள்; கண்ணகடூரமான இவ்வார்தைகளை அந்தப் பாதகியாகிய அசமுகி சொல்லி முடிப்பதற்கிடையில் இந்திராணியானவள் தன் இருகரங்களாலும் இரு செவிகளையும் பொத்தினாள்; இப்படிப்பட்ட பழிமொழிகளையும் கேட்க நேர்ந்ததேயென்று நெட்டுயிர்த்தாள். (வரும்)

மலேயாவுக்கு நாகபட்டணம் மார்க்கமாக

கப்பல் சீட்டு

[மாசமிருமுறை கப்பல்கள் போகின்றன]

யாழ்ப்பாணமிருந்து ரெயில்வே ரிக்கற் சாப்பாடு, லக்கேஷ்சார்ஷ் இருப்பிடச்செலவு எல்லாம் உட்பட நாகபட்டனமிருந்து பினங் செல்ல டெக் ரிக்கற் ரூபாய் 130 க்கு எங்கள் மூலமாக பெற்றுக் கொள்ளலாம்

வேறு செலவு உங்களுக்கு இல்லை

பல நூற்றுக்கணக்கானோர் எங்கள் மூலமாகப் பிரயாணஞ்செய்து திருப்தியடைந்து கொடுத்த நற்சாட்சிகள் அநேகம் உண்டு.

வடஇலங்கையில் இவ்வகையில் முதல்ஸ்தானம் வகிக்கிறோம்

எங்களிடம் மற்ற விபரங்களை நேரிலோ லெட்டர் மூலமோ தெரிந்துகொள்ளலாம்.

ஸ்ரீ கதிர்வேல் அன்கோ,
252, காங்கேசன்துறைரோட்
சிவன்கோவிலடி,
யாழ்ப்பாணம்.

தந்தி (Srivel)
பிராஞ்சு: நாகபட்டணம்.

Std 3 2—9—47&28-2-48

கொழும்பு—சிங்கப்பூர் கப்பல் பிரயாணம்

மாதம் ஒருமுறை ஒழுங்காகச் செல்லும் கப்பலில் பிரயாணச்சீட்டு எம்மூலம் பெற்றுக்கொள்ளலாம். பிரத்தியேக வண்டியில் யாழ்ப்பாணமிருந்து பிரயாணம், கொழும்பில் தங்கும் வசதி யாவும் குறைந்த செலவில் ஏற்பாடு செய்யப்படும்.

நாகபட்டணம் பினங் பிரயாணிகளின் கட்டணம் 130 ரூபாவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

விபரம்:

எஸ். ஆர். எஸ். நாதன்,
21/3, ஸ்ரான்லி ரோட் யாழ்ப்பாணம்
[விள்ச்-வெலிங்டன் படாவிகைகளின் மத்தியில்]

Std 23. 6-6-47—6-6-48

விளம்பரம்

இப்பொழுது எங்கள் கைவசமுள்ள பற்கள் பிரபையுடையன; அழகிய இயற்கையானநிறமுடைய முரசு பொன்ற முரசோடு கூடியன; சராசரி ½ அவுன்ஸ் நிறையுள்ள பற்கள் இறகுபோலப் பாரமற்றன; ஆனால் ஒருபோதும் உடையாதன; முரசில் இலகுவாக மாட்டத்தக்கன: எங்களிடத்தில் ஒருமுறை வாங்கி உபயோகித்தாற்றான் இந்த உண்மைகள் உங்களுக்குப் புலப்படும்.

பத்திராணு மாளிகை

[யாழ்ப்பாணம் அப்போதிக்கரிஸ கம்பனிக்கு எதிரேயுள்ளது]
யாழ்ப்பாணம்

Std 28 11-7—10-10-47.

இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூபா	4, 500, 000, 00
கொடுக்கப்பட்ட வேதனம்	,,	3, 000, 000, 00
நேமநிதி	,,	2, 600, 000, 00

தலைமைக்காரியாலயம்:- பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.
நியூயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்வின் ட்ரஸற் கம்பனி.
லண்டன் ஏஜெண்டுகள்:- பார்க்கிளேஸ வங்கி.
கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்)
யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:- 242, ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

நடைமுறைக்கணக்கு:-
இலங்கையில் (திருக்கோணமலையை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

சேமிப்புப் பணம்:-
ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

நிரந்தர சேமிப்பு:-
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

நாணயமாற்று:-
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

பிறநாட்டு விவகாரப் பகுதி:-
ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

T. S. முத்துலிங்கசாமி
ஏஜெண்டு,

Std.29 1-8—30-7-48

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna, on Tuesday, September 30, 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org